










# ஆடிப் பாடலாம்

மனிதர்கள் இயற்கை அழகினைக் காணும்போது நடனமாடினர் ...
ஒயிலாட்டம் பிறந்தது.



மயில் தோகைவிரித்து ஆடுவதைக் கண்டு நடனமாடினர்...
மயிலாட்டம் பிறந்தது.



உனக்கு விருப்பமான நடனம் எது ?

______________________________

உனக்கு எப்பொழுது நடனம் ஆட வேண்டும் எனத் தோன்றும் ?

______________________________

மழை, திருமணம், அறுவடை, குழந்தைப் பிறப்பு போன்றவற்றைக் கொண்டாடுவதற்கு மக்கள் நடனம் ஆடத் தொடங்கினர்.

மனித உணர்வுகளின் வெளிப்பாடுகளே கலைகளாக மலர்கின்றன. கிராமப்புற மக்களின் வாழ்க்கையோடு இணைந்த கலைகள் நாட்டுப்புறக் கலைகள் எனப்படும். நாட்டுப்புறக்கலைகள் எளிமையான வெளிப்பாட்டுக்கு வழிவகுக்கின்றன. தமிழ்நாட்டில் கலை இயல், இசை, நாடகம் என்ற மூன்று வடிவங்களில் வளர்ச்சி பெற்றது . இதற்கு அடிப்படையாக அமைந்தவை நாட்டுப்புறக் கலைகள்.



தெருக்கூத்து, கரகாட்டம், ஒயிலாட்டம், காவடியாட்டம், கும்மி, கோலாட்டம் போன்றவை குறிப்பிடத்தக்க நாட்டுப்புறக் கலைகளாகும்.

## தெருக்கூத்து



நாட்டுப்புறக் கலைகளில் தெருக்கூத்து மிக முக்கியமானது. இது ஆடம்பரமான மேடைப் பின்னணிகள் இல்லாமல் ஊர் மக்கள் கூடும் இடங்களில் நடத்தப்படும். திருவிழாக் காலங்களில் இரவு தொடங்கி அதிகாலை வரை கூத்து நடைபெறும்.

இதிகாசங்கள், புராணங்கள் மற்றும் வரலாற்றில் இடம் பெறும் கதைகளே பெரும்பாலும் கூத்துகளாக நடிக்கப்படுகின்றன. தெருக்கூத்தின் எளிமையான உரையாடல்கள் மக்களை வெகுவாக ஈர்க்கின்றன. இசையுடன் கூடிய



பாடல்களுக்கு முன்னுரிமை தரப்படுகின்றன. தெருக்கூத்துக் கலைஞர்கள் கிரீடம், கவசம் பளப்பளப்பான ஆடைகள் அணிந்திருப்பார்கள். தகவல் தொடர்புச் சாதனங்கள் வளராத காலத்தில் இருந்தே மக்களுக்குத் தேவையான வாழ்வியல் கருத்துகளைத் தெருக்கூத்து வழங்கி வருகின்றது.



திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள புரிசை என்னும் கிராமத்தில் காலங்காலமாகக் கூத்துக்கலை நிகழ்த்தும் கலைஞர்கள் பல குழுக்களாக வாழ்ந்து வருகிறார்கள்.

### தெருக்கூத்தில் இடம் பெறும் கதைகள்

______________________________

கூத்துக்கலையின் படிப்படியான வளர்ச்சியே நாடகங்கள்



## கரகாட்டம்



கரகாட்டம் மக்களால் விரும்பப்படும் கலையாக விளங்குகிறது. சிறிய பித்தளைச் செம்பில் நவதானியங்களை நிரப்புவர். அதன் மேற் பகுதியை வண்ணச் சரிகைகள் மற்றும் பூக்களால் கூம்பு போல் அலங்கரிப்பர். அதன் உச்சியில் கிளி அல்லது மயில் பொம்மைகள் பொருத்தப்பட்டிருக்கும். இவ்வமைப்பு கரகம் எனப்படும். கரகத்தைத் தலையில் வைத்துக்கொண்டு கரகம் கீழே விழாமல் பாடலின் பொருளுக்கும், வாத்தியங்களின் தாளத்திற்கும் ஏற்பக் கரகாட்டக்காரர் ஆடுவர். இதுவே கரகாட்டம் எனப்படும். கோயில் திருவிழா, வீதிஉலா மற்றும் ஊர்வலம் போன்றவற்றில் கரகாட்டம் இடம்பெறும்.

## ஒயிலாட்டம்

ஒயில் எனும் சொல்லுக்கு அழகு என்பது பொருள். ஆண்கள் வண்ண உடைகள் அணிந்து கொண்டு அழகாக ஆடும் ஆட்டம் ஒயிலாட்டம் எனப்படும். ஒயிலாட்டக் கலைஞர்கள் காலில் சலங்கையும், தலைப்பாகையும் அணிந்திருப்பார்கள். வலக் கையில் வண்ணத் துணிகளை வைத்திருப்பார்கள். மதுரை, தேனி, விருதுநகர், கோவை மாவட்டங்களில் இக்கலை புகழ் பெற்று விளங்குகிறது.





## காவடியாட்டம்

வழுவழுப்பான ஒரு மரத்துண்டின் இருபுறமும் பூசைக்குரிய பொருள்களைக் கட்டுவர். அதனைத் தோளில் வைத்து மலைமீது உள்ள இறைவனை வழிபடுவதற்கு எடுத்துச் செல்வர். இந்த அமைப்பே காவடி எனப்படும். இதுவே நாளடைவில் வில் போன்ற அரைவட்ட அமைப்புடைய காவடியானது. காவடியாட்டத்தில் ஆடுபவர் அலங்கரித்த காவடியைத் தோளிலும், தலையிலும் வைத்துக்கொண்டு சுழன்று சுழன்று ஆடுவர். காவடியாட்டத்திற்கு எனத் தனி இசையுடன் கூடிய காவடிச்சிந்து பாடல்களைப் பாடி ஆடுவர்.



## கும்மி



நாட்டுப்புறக்கலைகளில் கும்மிக்கென்று சிறப்பான ஓர் இடம் உண்டு. குரல்வளமிக்க பெண்கள் கும்மிப் பாடலைப் பாடுவர். கடவுள் உருவச்சிலை மற்றும் குத்து விளக்கை நடுவில் வைத்துக் கைகளால் தாளம் தட்டிக் கும்மியடித்துப் பாடுவர். திருவிழாக்கள், பண்டிகைகள், சமூக மற்றும் குடும்ப விழாக்களில் கும்மி ஆட்டம் இடம்பெறும். பெரும் பொருட் செலவோ, ஒப்பனையோ தேவையற்ற கலையாகக் கும்மி விளங்குகிறது. கிராமிய ஆடல் பாடல்களில் தனிச்சிறப்பும், மக்களின் வரவேற்பும் பெற்ற சிறப்புடைய கலையாகக் கும்மி போற்றப்படுகிறது. பாரதியார், பாரதிதாசன் எழுதியுள்ள கும்மிப் பாடல்கள் மிகவும் புகழ்பெற்றவை.





## கோலாட்டம்



கோலாட்டக் கலைஞர்கள் இரு கைகளிலும் வண்ணக் கோல்களைப் பிடித்துக்கொள்வர். அவற்றைப் பாடல் ஓசைக்கு ஏற்ப தட்டித் தட்டி ஒலி எழுப்புவர். கோலாட்டத்தில் ஆண்களும், பெண்களும் பங்கு பெற்று ஆடுவர். கோலாட்டம் ஆடுபவர்கள் வண்ணமிகு உடைகளை அணிந்து வரிசையாய் நின்றும், வட்டமிட்டும், சுழன்று சுழன்றும் ஆடுவர். இதில் பின்னல் கோலாட்டம் காண்பதற்குக் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.



## புரவியாட்டம்

தமிழகத்தின் பழமையான கிராமியக் கலைகளுள் ஒன்றாகப் புரவியாட்டம் விளங்குகிறது. இது பொய்க்கால் குதிரை என்றும் அழைக்கப்படுகிறது. ஆண், பெண் இருவரும் அரசன் அரசி வேடம் அணிந்து ஆடுவர். குதிரையின் கால் போன்ற கட்டைகளைக் கால்களில் கட்டிக் கொண்டு ஆடுவதால், இது பொய்க்கால் குதிரை ஆட்டம் எனவும் சொல்லப் படுகிறது. குதிரையின் உடல் போன்ற பொம்மையின் முதுகுப் பகுதிகளில் சிறிது வெட்டி எடுத்துவிட்டு, அதனுள் நுழைந்து அதை இடுப்புப் பகுதியில் பொருத்திக் கொண்டு, இசைக்கேற்ப குதிரை மீது சவாரி செய்வதுபோல, முன்னும் பின்னும் அசைத்து ஆடுவர். பாட்டின் பொருளுக்கேற்ப பாவனைகளைச் செய்வர். விரைவும் விறுவிறுப்புமிக்க கால் பெயர்வுகள் ஆட்டத்திற்கு அழகு சேர்க்கும். அனைத்து வயதினரும் வட்டமிட்டுச் சுற்றி நின்று ஆரவாரத்துடன் கண்டுகளிப்பர்.



சிலம்பாட்டம், பொம்மலாட்டம் போன்ற நாட்டுப்புறக்கலைகளும் தமிழகத்தில் சிறப்புற்றுள்ளன.

**உனக்குப் பிடித்த நாட்டுப்புறக் கலை எது ? ஏன் ?**

______________________________

## வில்லுப்பாட்டு

தந்தனத்தோம் ஆஹா! தந்தனத்தோம்!!
தந்தனத்தோம் என்று சொல்லியே
வில்லினில் பாட வந்தருள்வாய்
கணபதியே... வந்தருள்வாய் கலைமகளே...

இவ்வரிகளை நீங்கள் அனைவரும் கேட்டிருப்பீர்கள். வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் இந்தத் தொடக்க வரிகளைத் தான் அனைத்து வில்லிசைக் கலைஞர்களும் பாடுவார்கள்.

பலரும் விரும்பும் பல்சுவை நிகழ்ச்சியாக வில்லிசை உள்ளது. இதன் மூலம் பொது மக்களுக்குத் தேவையான தகவல்கள் எளிதில் வழங்கப்படுகின்றன.



பாடலைக் கதை வடிவில் சொல்லுபவர் நடுவில் அமர்ந்திருப்பார். அவர் எதிரில் சலங்கைகளால் மணிகளால் அலங்கரிக்கப்பட்ட நீண்ட வில் இருக்கும். அவரின் இரண்டு கைகளிலும் வில்லின் நாணைத் தட்டி முழங்கும் இரு கோல்களை வைத்திருப்பார். அவற்றைக்கொண்டு பாட்டிற்கு ஏற்ப வில்லினைத் தட்டி இசை மீட்டுவார். இடைஇடையே கதை தொடர்பான வினாக்களை ஒருவர் கேட்டுக் கொண்டே இருப்பார். இது பெரும்பாலும் கேட்பவர்களின் ஐயங்களை ஒட்டியே இருக்கும். புராணங்கள், இதிகாசங்கள், ஆன்மிகம்,வரலாற்று நிகழ்வுகள், சமூகச் சீர்திருத்தம் போன்ற செய்திகளை உயிரோட்டமாகப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்லுவர். வில்லுப் பாட்டிசை நிகழ்ச்சியில் திரு.சுப்பு ஆறுமுகம் குறிப்பிடத்தக்கவர். நாட்டுப்புறக்கலைகள் மக்களுக்குப் புத்துணர்ச்சி அளித்துக் கலை உணர்ச்சிக்கு விருந்தளிக்கின்றன.

நாட்டுப்புறக்கலைகள் குறித்த படத்தொகுப்பு தயார் செய்க.

## செயல்பாடுகள்



1. நீ கண்டு களித்த நாட்டுப்புறக் கலைகள் பற்றித் தொகுத்து வழங்குக.

| வ.எண். | கலையின் பெயர் | இடம் பெற்ற இசைக்கருவிகள் | பார்த்த இடம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

2. பப்பாளி இலைக்காம்பில் ஊது குழல் செய்து பார்க்கலாமா ?

- பூவரச இலையை எடுத்துச் சுருட்டிக் கொள்ளவும், காம்புப் பகுதியைக் கிள்ளிவிடவும்.
- பப்பாளித் தண்டினை எடுத்துக் கொள்ளவும். இதன் இலைப் பகுதியையும், அடிப்பகுதியையும் வெட்டி, அதில் 4 அல்லது 5 துளைகள் இடவும்.
- சுருட்டிய பூவரசு இலையை எடுத்துப் பப்பாளித் தண்டில் பொருத்தி ஊதிப்பார். என்ன நிகழ்கிறது ?


3. படங்களோடு தொடர்புடைய கலைகளின் பெயர்களை எழுதுக.



______________________



______________________



## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. புரிசை கிராமம் உள்ள மாவட்டம் ____________________.


   அ) வேலூர்　　ஆ) திருவண்ணாமலை　　இ) காஞ்சிபுரம்

2. ஒயில் என்னும் சொல்லுக்கு ____________________ என்று பொருள்.

   அ) அழகு　　ஆ) அறிவு　　இ) அன்பு

3. பொது மக்களுக்குத் தேவையான தகவல்களை வழங்கும் நாட்டுபுறக்கலை ____________________.

   அ) கும்மிப்பாட்டு　　ஆ) வில்லுப்பாட்டு　　இ) காவடியாட்டம்



### II. கோடிட்ட இடத்தை நிரப்புக

1.கதைகளை நடிப்பு மூலம் தெருவில் நடித்துக்காட்டப்படும் கலை____________.

2.தலையில் செம்பு வைத்து ஆடும் ஆட்டம் ____________________.

3.வட்டமாக நின்று கைகளைக் கொட்டி ஓசை எழுப்பும் ஆட்டம்_____________.

4.பங்குனி உத்திர நாளில் சிறப்பாகக் கருதப்படுவது ____________________.

### III. வினாக்களுக்கு விடையளி



1. தெருக்கூத்து எவ்வாறு நடைபெறுகிறது?
2. நாட்டுப்புறக் கலைகள் ஐந்தினை எழுதுக.
3. கரகம் எவ்வாறு அலங்கரிக்கப்படுகிறது ?
4. காவடியின் தோற்றம் குறித்து சிறு குறிப்பு வரைக.
5. உன் ஊரில் நடைபெற்ற நாட்டுப்புறக் கலைகள் ஏதேனும் இரண்டினைப் பற்றி எழுதுக.

### IV. உன் ஊரிலுள்ள பெரியோர்களிடம் நாட்டுப்புறப் பாடல்களைக் கேட்டு சேகரி. ஏதேனும் நான்கு வரிகளை எழுது.